**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 15.07.2025**
**OS. No. 89/2020**
**வழக்கு சாட்சி PW.2–தேவராஜ், த/பெ.சொக்கலிங்கம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். வட்டிதொழில் ஏதேனும் செய்கிறேனா என்றால் இல்லை. நான் பிறந்ததிலிருந்து தற்போது வரை காவேரிபாளம் மீனவர் தெருவில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். இடைப்பட்ட காலத்தில் நான் வேறு எங்கும் குடிபெயரவில்லையா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதி சொல்லி தயார் செய்து, அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான், படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். வாதிக்கு நான் கிரையம் கொடுத்ததும், வாதி அதை பெற்றுக்கொண்டதும், பிரதிவாதிகளுக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டதும் எனக்கு தெரியும்.

2) வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சொத்தை விற்கும்போதே வீடு கட்டி தான் விற்றேன். பிரதிவாதிகளின் இடம் தாவா சொத்தில் உள்ளதாக தெரிவித்து பிரச்சனை செய்தார்கள். வேறு எந்த பிரச்சனையும் இல்லையா என்றால் இல்லை. வாதி செல்வராஜ் சிவக்குமாரின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வேறு யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வேறு யார் மீதும் இல்லை. நான் விற்பனை செய்த இடத்திற்கு அருகில் பொதுப்பணித்துறை வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். அந்த வாய்க்கால் பாலமலை முதல் காவேரி ஆறு வரை செல்கிறது என்றால் சரிதான். அதன் நீளம் சுமார் 2 கி.மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். மழை காலங்களில் அந்த வாய்க்காலில் சுமார் 4, 5 அடி வரை தண்ணீர் செல்லும் என்றால் சரிதான். அந்த வாய்க்காலின் அகலம் சுமார் 20 அடி இருக்கும்.

3) அந்த வாய்க்கால் நான் விற்பனை செய்த தாவா சொத்தின் அருகே அகலம் 20 அடி இருக்கும் என்றும், மற்ற இடங்களில் சுமார் 50 அடி வரை இருக்கும் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், நான் விற்பனை செய்த தாவா சொத்தின் அருகே சுமார் 4 அடி அகலம் தான் வாய்க்கால் உள்ளது என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்த இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் வரிவிதிப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. என் நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள வரிவிதிப்பு எண், சர்வே எண் ஆகியவை வாதி தான் என் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டார். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். தாவா சொத்தை உஷேன் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன்.

4) நான் கிரையம் பெற்ற 1 வருத்தில் தாவா சொத்தை விற்பனை செய்து விட்டேன். தாவா சொத்தில் நான் குடியிருந்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நத்தம் நிலம் என்று தெரிந்துகொண்டதால் நான் கிரையம் பெற்றேன். தாவா சொத்து அமைந்துள்ள இடம் வருவாய் துறை ஆவணங்களில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, நான் கிரையம் பெறும் போது நத்தம் நிலம் என்று சொல்லி தான் கிரையம் பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான அ–பதிவேட்டில் ச.எண்.29(பழைய ச.எண்.28) ஆனது PWD நத்தம் காலி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்தபோது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தான் அமைந்திருந்தது என்றால் சரிதான். **அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிற**து.

5) நான் விற்ற பிறகு தாவா சொத்தில் வாதி புதிதான சுற்றி ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்தபோது தாவா சொத்தின் நீளம் 60X25 ஆகும், அதில் வீடு 25X30 அடியில் கட்டப்பட்டிருந்தது. வாதியின் வீட்டை நான் இறுதியாக எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 1 வருடத்திற்கு முன்பு பாத்தேன். தற்போது வாதியின் வீடு என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு

உள்ளது, என்றால் சரிதான், வீட்டிற்கு முன்னால் வண்டி ஏற்றுவதற்காக சருவல் மட்டும் புதியதாக கட்டியுள்ளார். **அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிற**து. தாவா சொத்தில் புதியதாக கேட் மற்றும் ரேம்ப் மற்றும் ஆகியவற்றை கட்டியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள ஆஸ்பெட்ராஸ் சீட் புதியதாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் விற்பனை செய்தபோது தாவா சொத்தின் சக்குபந்தி விவரம் மேற்கே வாய்க்கால், கிழக்கே 1ம் பிரதிவாதி சிவக்குமாரின் வீடு இருந்தது, தெற்கில் இருசாக்கவுண்டர் வீடும், வடக்கே ரோடும் இருந்தது.

6) மேற்கண்ட சக்குபந்திகளை காண்பித்து தான் தாவா சொத்தை நான் கிரையம் கொடுத்தேனா என்றால் ஆமாம். ஆவணங்களில் மாறாக இருந்தால் அது தவறு என்றால் நான் சரியாகத்தான் குறிப்பிட்டு விற்பனை செய்தேன். வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றபோது கண்ணம்மாள் வீட்டிற்கு மேற்கே என்று தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் மேற்கில் வாய்க்கால் தான் இருந்தது. வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்திலும் தாவா சொத்தின் மேற்கில் கண்ணம்மாள் வீட்டிற்கு மேற்கே என்று தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட இரு ஆவணங்களிலும் 1, 2 பிரதிவாதிகளின் வீடு சக்குபந்திகளில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7) 2020ல் அ.இ.அ.தி.மு.க கட்சியின் ஆட்சி என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் சிவக்குமார் 2020ம் வருடம் அரசியல் மற்றும் ஆள்பலத்தால் என்னை மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற என்னிடம் கேட்டார்கள், விலை குறைவாக சொன்னதால் நான் விற்கவில்லை. என்னிடம் சொத்தை விற்கும் படி 1, 2 பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் வாதியிடம் சொத்தை குறைந்த விலைக்கு கிரையம் கொடுக்கும் படி கேட்டார்களா என்றால் அவரிடம்

கேட்கவில்லை, என்னிடம் தான் கேட்டார்கள்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி 29.07.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.